வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.09.2024 புதன்கிழமை இதழ் : 269 பக்கங்கள் : 12




# பிரதமரானார் ஹறிணி!

கொழும்பு, செப். 25

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 16ஆவது பிரதமராக தேசிய மக்கள் சக்தியின் கலாநிதி ஹறிணி அமரசூரிய நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்படி, இலங்கை வரலாற்றில் பிரதமராக பதவியேற்கும் மூன்றாவது பெண்மணி என்ற

11



## இந்தியா - சீனா இடையிலான புவிசார் அரசியல் மோதலுக்குள் சிக்க இலங்கை விரும்பவில்லை!

### ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, செப். 25

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புவிசார் அரசியல் மோதலில் சிக்குப்படுவதற்கு இலங்கை விரும்பவில்லை என்று புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வலுவான சுயாதீன வெளிவிவகார கொள்கை என்ற அணுகுமுறைக்கான விருப்பத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

11


# பாராளுமன்றம் கலைப்பு; நவம்பர் 14இல் தேர்தல்!

கொழும்பு, செப்ரெம்பர் 25

**நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தை கலைத்து விசேட வர்த்தமானியை நேற்றிரவு வெளியிட்டார்.**

அந்த விசேட வர்த்தமானியில்,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 70ஆம் உறுப்புரையில் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு அமைவாகவும் 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் ஏற்பாடுகளை பின்பற்றியும் 2024 செப்ரெம்பர் 25ஆம் திகதி நள்ளிரவிலிருந்து பாராளுமன்றத்



தைக் கலைத்து, 2024 நவம்பர் 21ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டவும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் அத்துடன், எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத்

11

## அநுரவுடன் சேர்ந்து பணியாற்றத் தயார்!

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு, செப். 25

இலங்கையை பொருளாதார மீட்சிக்கான பாதையில் கொண்டு செல்ல உதவிய கடின வெற்றிகளை கட்டியெழுப்புவதற்கு, ஜனாதிபதி அனுர திஸநாயக்க மற்றும் அவரின் குழுவினருடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம்

11

## செப்.30ஆம் திகதிக்கு முன்னர் சாதாரண தர பெறுபேறுகள்

கொழும்பு, செப். 25

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேற்றுக்கான ஆவணங்களை தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

11

## பிரதமர் வேட்பாளர் நானே; ஐ.தே.கவுடன் சேரமாட்டோம்!

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

"ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக என்னை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்துள்ளனர்.", என்று அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயல்பட முடியாது. ரணிலுடன் மீண்டும் சேரப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டம்

11

## புதிய அமைச்சரவையுடன் காபந்து அரசு அமைந்தது!

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் மூன்று பேர் கொண்ட அமைச்சரவை நேற்று அமைக்கப் பட்டது.

நாட்டின் 28ஆவது பிரதமராக ஹறிணி அமரசூரிய நேற்று நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து விஜித ஹேரத், லக்ஷமன் நிபுணராச்சி ஆகியோரும் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

பாதுகாப்பு, நிதி - பொருளாதார அபிவிருத்தி, தேசிய கொள்கைகள் - திட்டமிடல்

11

## 15 அமைச்சுகளுக்கு செயலர்கள்நியமனம்!

கொழும்பு, செப். 25

பிரதமரின் செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளர் உட்பட 17 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

க. மகேசன் மீண்டும் பெண்கள், குழந்தைகள், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

11

## நிறைவேற்றதிகார ஒழிப்பை பெரமுன கட்சி ஆதரிக்கும்!

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

தேசிய மக்கள் சக்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி அதற்கு ஆதரவளிக்கும் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1994 முதல் ஜனாதிபதிகள் நிறைவேற்றதிகார முறை மையை நீக்குவோம் என்று தெரிவித்துள்ள போதிலும் இன்னமும் அதனை செய்யவில்லை.

11

## ஜனாதிபதி இன்று உரை!

கொழும்பு, செப். 25

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இன்று புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு உரையாற்றவுள்ளார்.

இந்த உரையின்போது அவர் தனது அரசாங்கத்தின் புதிய திட்டங்களை

11

## ஊழல் அரசியல்வாதிகளுக்கு பெரமுன கட்சியில் இடமில்லை!

### பொதுத் தேர்தலுக்கு தயாராம்

கொழும்பு,பெப். 25

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் மீண்டும் சேர்ப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாகவும் தாம் பாராளுமன்றத் தேர்தலுக்கு தயாராகி வருவதாகவும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி விரிவான

11

## வடக்கு ஆளுநராக நா.வேதநாயகன்?

கொழும்பு, செப். 25

வடக்கு மாகாண ஆளுநராக நா. வேதநாயகன் நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் உட்பட 6 மாகாணங்களின் ஆளுநர்கள் இதுவரை பதவி விலகியுள்ளனர். ஆளுநர்கள் பதவி விலகிய மாகாணங்களுக்கு புதிய

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண தேர்தலை இப்போது நடத்தி அதிகாரங்களை பகிர்வதே முக்கியம்!

## மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 25

பாராளுமன்றத் தேர்தலை விடவும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதே முக்கியத்துவமானது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

இராஜகிரியவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் உரைக்கமைய பாராளுமன்றம் ஓரிரு தினங்களுக்குள் கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்ததன் பின்னர் 52 தொடக்கம் 66 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

பாராளுமன்றத்தை கலைப்பதாக அறிவிக்கும் வர்த்தமானியில் வேட்புமனு தாக்கலுக்கான தினத்தையும் தேர்தலுக்கான தினத்தையும் குறிப்பிட வேண்டியதில்லை.

அதாவது இவ்வாரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் டிசெம்பர் மாதத்தின் முதல் வாரத்துக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தற்போதுள்ள பாராளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை கிடையாது. எனவே இந்த பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்படவேண்டும். அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தி மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது மாகாண சபைகளும் காணாமலாக்கப்பட்டிருக் கின்றன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக நாம் முன்னிற்போம்.

13ஆவது திருத்தமா அல்லது 13 பிளஸா என்பது இரண்டாம் பட்சமாகும். ஆனால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் - என்றார். (அ)

# ஜனாதிபதி அநுரவுக்கு ஆசி வேண்டி யாழில் விசேடபூசை

யாழ்ப்பாணம், செப். 25

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர குமார திஸநாயக்கவுக்கு ஆசி வேண்டி வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடு நேற்று நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளர் ராஜபாலன் பிரகாஸ்பதியின் ஏற்பாட்டில் இந்த சிறப்பு பூசை நடைபெற்றது.

தொடர்ந்து, மாவிட்டபுரம் சந்தியில் கட்சியின் ஆதரவாளர்களால் பொதுமக்களுக்கு இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# மேல் மாகாண ஆளுநரும் இராஜினாமா செய்தார்!

கொழும்பு, செப். 25

மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ரொஷான் குணதிலக தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை அவர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க பதவியேற்றதைத் தொடர்ந்து, அவர் புதிய ஆளுநர்களை நியமிக்க வசதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகி வருகின்றனர்.

நேற்றுவரை வடக்கு, கிழக்கு, வடமேல், ஊவா, வடமத்திய, தென் மாகாண ஆளுநர்கள் பதவியிலிருந்து விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பணவீக்கம் குறைவடைவு

கொழும்பு, செப். 25

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் 2024 ஜூலை மாதத்துக்கான இலங்கையின் தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் மற்றும் மாதாந்திர நுகர்வோர் பணவீக்கத்தை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஜூலை 2024 இல் 2.5 வீதமாக இருந்த பணவீக்கம் ஒகஸ்ட் 2024 இல் 1.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

மேலும் ஜூலை 2024 இல் 2.9 வீதமாகப் பதிவான உணவு வகை பணவீக்கம் ஒகஸ்ட் 2024 இல் 2.3 வீதமாக குறைவடைந்துள்ளது.

மேலும், 2024 ஜூலையில் 2.2 வீதமாக இருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் ஒகஸ்ட் 2024 இல் 0.2 வீதமாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாராட்டு வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப். 25

சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்களின் சமய, சமூகப் பணியை பாராட்டி அவருக்கு விருது வழங்கும் நிகழ்வு சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சிறிலசிறீ ஆறுமுக நாவலரின் 200ஆவது ஆண்டில் ஆரம்பித்த வாராந்த சொற்பொழிவும் மாதாந்த நாயன்மார்கள், ஈழத்து சித்தர்கள் குருபூசை நிகழ்வை தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக நடத்தி வந்தமையை பாராட்டியே இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் சொற்பொழிவாற்றும் குழுவினரால் "ஆகமக்கிரியா சமூக சிரோன்மணி" என்ற விருதும் நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால் "திருமுருக உபாச ஞானி" என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். (ஐ)

# அமைச்சு பணிமனையை ஒப்படைத்தார் மகிந்த!

கொழும்பு, செப். 25

விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சராக பணியாற்றிய மகிந்த அமரவீர, தாம் பயன்படுத்திய பணிமனை மற்றும் அரச வாகனத்தை அந்த அமைச்சின் செயலாளரிடம் கையளித்தார்.

அத்துடன், நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனைத்து வகையிலும் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேநேரம், அமைச்சின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஆதரவை வழங்கிய பணியாளர்களுக்கும் முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர நன்றி தெரிவித்துள்ளார். (ஐ)

# மூதாட்டியை வன்புணர்ந்தவருக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் சிறை!

கொழும்பு, செப். 25

மூதாட்டியை வன்புணர்ந்த வழக்கில் குற்றவாளியாக இனங் காணப்பட்ட நபருக்கு 15 வருடங்கள் கடூழிய சிறை விதித்தார் காலி மேல் நீதிமன்ற நீதிபதி காவிந்தயா நாணயக்கார.

இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் விதிக்கப்பட்ட இந்த சிறைத் தண்டனையை 15 ஆண்டுகளுக்கு ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், குற்றவாளிக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி பாதிக்கப்பட்டவருக்கு 5 இலட்சம் ரூபாயை நட்டஈடாக வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மேலும், அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் ஆறு மாத சிறைத் தண்டனையும், இழப்பீடு தொகையை செலுத்த தவறினால், ஓராண்டு சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி தெலிக்கடை பகுதியைச் சேர்ந்த ஹிச்சி கொல்ல என்றழைக்கப்படும் ஹினதிகல பெடிகே ரொஷான் மதுசக என்பவருக்கு இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2013 ஜனவரி 18ஆம் திகதி இரவு மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்த குற்றவாளி அவரை வன்புணர்ந்துள்ளார். அவருக்கு எதிரான குற்றங்கள் வழக்கில் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே குற்றவாளிக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# குடையிற் சுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், செப். 25


சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும் மாதாந்த ஈழத்து சித்தர்கள் குருபூசை தொடர் 5இல் குடையிற் சுவாமிகள் குருபூசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 5 மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

குடையிற் சுவாமிகள் குருபூசையைத் தொடர்ந்து, மாணவர்களின் கலைநிகழ்வும் சைவப்புலவர் க. கயிலைநாதன் "வணங்க வேண்டிய குடையிற் சுவாமிகள்", என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து, ஆன்மீக விருந்தினர் உரை நடைபெறும். (ஐ)

# மாணவர் தலைவர்கள் சின்னம் சூட்டும் நிகழ்வு



வடமராட்சி, செப். 25

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் செல்வி ராஜலக்ஷ்மி சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக தாவரவியல் விஞ்ஞானபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாமகள் கிருஷ்ணபிள்ளை கலந்து கொண்டார்.

இதன்போது, பிரதம விருந்தினருக்கான நினைவுச் சின்னமும் பாடசாலை சமூகத்தினரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ-02)

# கோட்டாபய ராஜபக்ஷ நேபாளத்தில் தஞ்சம்!

கொழும்பு, செப். 25

ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க கொழும்பில் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்தநிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேபாளம் சென்றடைந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேபாளத்தின் காத்மண்டு நகரை வந்தடைந்தார் என்று நேபாள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காத்மண்டுவில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கோடீஸ்வர தொழிலதிபர் பினோத் சவுத்ரி ஆதரவளிக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை காலை காத்மண்டுவில் தரையிறங்கிய பின்னர், கோட்டாபய, ஜாம்சிகேலில் உள்ள மிவாண்டா ஹோட்டலில் தங்கியுள்ளார்.

75 வயதான கோட்டாபய மற்றும் அவரது மனைவி ட்ரூக் எயார் கே.பி 400 விமானம் மூலமாக காத்மண்டுவை அடைந்தனர்.

காத்மண்டுவில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் அவர்கள், இன்று புதன்கிழமை பரத்பூருக்குச் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
25.09.2024 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர்களுக்கான மாறுதல் எப்போது?

அநுரகுமாரவின் வெற்றி மிகச்சிறந்த மாறுதல் என்று பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸநாயக்க வெற்றிபெற்றமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். சிங்கள மக்கள் தங்களுக்கான மாற்றத்தைக் காண்பித்திருக்கின்றனர். யுத்த வெற்றிவாதத்தை காலந்தோறும் புதுப்பித்து சிங்கள மக்களை ஆளலாம் என்று எண்ணிய ராஜபக்ஷக்களை முற்றிலுமாக நிராகரித்திருக்கின்றனர். சிந்தார்த்தன் கூறுவது போன்று, சிங்கள மக்கள் மத்தியில் நிகழ்ந்த மிகச்சிறந்த மாற்றம் என்பதில் ஐயமில்லை. ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான சிறந்த மாற்றம் எப்போது நிகழும்? ஒரு போதுமே நிகழாதா?

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான மக்கள் ஆதரவு ஓரளவு திருப்தியாக இருந்தாலும்கூட, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றமாகக் கருதமுடியாது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் மாற்றங்களை ஆதரிக்காதவர்களாக இருக்கின்றனரா அல்லது தமிழ் மக்களை மாற்றத்தை நோக்கி சிந்திக்க முடியாதளவுக்கு தமிழ் அரசியல்வாதிகள் செயல்படுகின்றனரா? தமிழ் மக்கள் மாற்றத்தை நோக்கி இனியும் சிந்திக்காதுவிட்டால் அவர்களுக்கு அரசியல் விமோசனம் இருக்கப் போவதில்லை.


தமிழ் அரசியல் தலைமைகளின் இயலாமை போதியளவு நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அவர்களை ஆதரிப்பவர்களாகவே இருக்கின்றனர். பாரம்பரிய கட்சி - பழக்கப்பட்ட கட்சி என்னும் அடிப்படையில் சிந்தித்தால் மக்கள் மத்தியிலிருந்து புதிய தலைமைகள் ஒருபோதும் உருவாகாது. தமிழ்த் தேசிய அரசியல் கிட்டத்தட்ட ஓய்வூதிய அல்லது முதியோர் இல்ல அரசியலாகவே இருக்கின்றது. புதிய காற்றை சுவாசிக்க முடியவில்லை. இந்தப் போக்கு ஆரோக்கியமான ஒன்றல்ல. கதிரையைத் தொடர்ந்தும் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணும் அரசியல்வாதிகளாகவே பலரும் இருக்கின்றனர்.

இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்த பின்னரும் உயர்நிலை இடம்கொடுக்காத போதிலும் கதிரை ஆசையிலிருந்து பலரால் விடுபட முடியவில்லை. இவர்களை அசிங்க அரசியல்வாதிகள் என்றுதான் கூறவேண்டும். மக்கள் ஏன் தங்களைத் தொடர்ந்தும் நிராகரிக்கின்றனர் என்பதைக்கூட சிந்திக்க முடியாதவர்களாகவே பலரும் இருக்கின்றனர். இதன் காரணமாகவே தமிழ் இனம் தலைமையற்ற ஓர் இனமாக மாறியிருக்கின்றது. ஆனால், சிங்கள மக்களோ ஒரு தலைமை இல்லாமல்போகும் போது, புதிய தலைமையை நோக்கி சிந்திக்கத் தயங்காதவர்களாளவே இருக்கின்றனர். அவர்கள் பாரம்பரியம் என்றுகொண்டு கிடக்கவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலில் உண்மையாக இருப்பது உண்மையாயின் வயது மூத்த தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல்களிலிருந்து விலகி, புதியவர்களுக்கு இடமளிக்க முன்வர வேண்டும் - வருவார்களா?

## பொது வேட்பாளர் அரியநேத்திரனின் அரசியல் சேவை தொடர வேண்டும்

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 25

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிட்ட பா. அரியநேத்திரன், தமிழ் மக்களுக்கான அரசியல் சேவையை தொடர வேண்டும் எனவும், பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்-

எந்தவிதமான சுயநலனும் இல்லாமல், தமிழ்த் தேசிய எழுச்சியின்பால் கொண்ட பற்றுறுதியின் காரணமாக, பா. அரியநேத்திரன் இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்தமை தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான ஒரு விழிப்புணர்வையும் அணி திரட்டலையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

அரியநேத்திரனின் தமிழ் மக்களுக்கான அரசியல் சேவை தொடர வேண்டும். அது தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதையும், நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்-என்றுள்ளது. (அ)

## மாமனார் தாக்கியதில் மருமகன் படுகாயம்!

கிளிநொச்சி, செப். 25

மதுபோதையில் மாமன் மருமகனுக்கு இடையே ஏற்பட்ட தகராறு மோதலாக மாறியதில் மருமகன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கிளிநொச்சி - பெரிய குளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாமனாரும் மருமகனும் மது அருந்திய நிலையில் இருவரிடையேயும் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மாமனார் மருமகனின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கினார் என்று கூறப்படுகின்றது. இதில், படுகாயமடைந்த மருமகன் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட டுள்ளார்.

இந்த சம்பவத்தில் பூபாலசிங்கம் ஐங்கரன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## புதிய நிர்வாகம் தெரிவும் காலபோக கூட்டமும்

யாழ்ப்பாணம், செப். 25

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் புதிய நிர்வாக சபை தெரிவும் நெல் செய்கையாளர்களுக்கான வருடாந்த காலபோக கூட்டமும் தலைவர் தவராஜா தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் (வேளாதோப்பு அம்மன் கோவிலுக்கு அருகில்) இந்தக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொக்குவில் புதுக்கோயில் முன் உண்ணாவிரதப் போராட்டம்!



யாழ்ப்பாணம், செப். 25

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய (புதுக் கோயில்) ஆலயம் முன்பாக ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஆலய நிர்வாகத்தின் முறைகேடுகளை கண்டித்தும் புதிதாக தெரிவான நிர்வாகத்தை சுமுகமாக இயங்க விடுமாறும் கோரியே நேற்றுமுன்தினம் முதல் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

உரிய தரப்பினர் விரைந்து செயல்பட்டு ஆலயத்தை சீராக இயங்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 25 புதன்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 09
நல்ல நேரம் : 04.32 - 06.02
ராகு காலம் : 12.00 - 01.32
திதி : சப்தமி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. நீண்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. சகோதரர் வகையில் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனையை தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புதுதொழில் தொடங்குவீர்கள்.

**சிம்மம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**விருட்சிகம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்க தொடங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள். புது வேலை கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். சொத்துப் பிரச்னைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும்.

### போர் நிறுத்தம், அமைதி வேண்டி


# ரஷ்யா - உக்ரைன் பெண்கள் இந்து கோவில்களில் வழிபாடு

சென்னை, செப். 25

இரு நாடுகளிடையே போர் நிறுத்தம், அமைதி வேண்டி ரஷ்யா - உக்ரைன் நாடுகளைச் சேர்ந்த இரண்டு பெண்கள் தமிழகத்திலுள்ள இந்துக் கோவில்களில் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை அருகேயுள்ள 69 சாத்தனூர் கிராமத்தில் உள்ள திருமூலர் கோவிலில் ரஷ்யா - உக்ரைன் தோழிகள் வழிபாடு நடத்தினர்.

ரஷ்யாவைச் சேர்ந்தவர் ஷெனியா(வயது -27), உக்ரைனைச் சேர்ந்தவர் இலியானா(வயது - 29). இவர்கள் இருவரும், இரு நாடுகளிடையே போர் தொடங்குவதற்கு முன்பிருந்தே தோழிகளாக உள்ளனர். அண்மையில் இந்தியா வந்த இருவரும், இரு நாடுகளிடையே போர் நிறுத்தம், அமைதி வேண்டி தமிழக கோவில்களில் வழிபாடு நடத்த முடிவு செய்தனர்.



இதைத்தொடர்ந்து, கடந்த 2 நாட்களாக கும்பகோணம் பகுதியில் உள்ள திருநள்ளாறு, திருநாகேஸ்வரம், சுஞ்சனூர் சுக்கிரன், திருமணஞ்சேரி ஆகிய கோவில்களில் வழிபாடு நடத்தினர்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் ஷெனியா, இலியானா கூறியவை வருமாறு, "ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையே போர் முடிவுக்கு வரவேண்டும் என கோவில்களில் வழிபாடு செய்து வருகிறோம். எங்களது நம்பிக்கை வீண் போகாது. இரு நாடுகளிலும் அமைதி ஏற்படும் என நம்புகிறோம். அடுத்து, மதுரை மீனாட்சி அம்மன், பழநி, திருவண்ணாமலை ஆகிய கோவில்களுக்கும் சென்று வழிபாடு நடத்தவுள்ளோம்"- என்றனர். (எ)

# சமதர்ம இந்தியாவை உருவாக்க இணைந்து பணியாற்ற வேண்டும்

### தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, செப். 24

மதச்சார்பற்ற, சகோதரத்துவ, சமூகநீதி ஆகியவற்றை உள்ளடக்கிய சமதர்ம இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் சீதாராம் யெச்சூரி வழியில் நின்று பணியாற்ற வேண்டும் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.



இதில் மு. க. ஸ்டாலின் நினைவேந்தல் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு, "மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் சொந்தமாக வாழ்ந்து வழிகாட்டியவர் சீதாராம் யெச்சூரி. இந்தியாவின் கருத்தியல் அடையாளமாக அவர் திகழ்ந்தார். அவரது மறைவு கருத்தியலுக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

கருணாநிதி மீதும் என் மீதும் பாசம் வைத்திருந்தார். கூட்டணி குறித்து பேசும் போது தமிழக தலைவர்கள் முரண்டு பிடித்தாலும் அவர் சிரித்த முகத்துடன் வந்து பேச்சுகளை முடித்துவிட்டுச் செல்வார். அவரது புன்சிரிப்பு மறக்க முடியாது"- என்றார்.

# "தமிழக மீனவர்களுக்கு இலங்கையில் அதிகளவு அபராதம் விதிக்கப்படுகிறது"

சென்னை, செப். 25

கைது செய்யப்படும் தமிழக மீனவர்களுக்கு இலங்கை அரசு அதிக அபராதம் விதிப்பதை தடுக்க வேண்டும். மீனவர்களுக்கு சட்ட உதவி வழங்கி, அவர்களையும், படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று

மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

"தமிழக மீனவர்கள் தங்கள் பாரம்பரிய பகுதிகளில் மீன்பிடிக்கும்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதை ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளேன். இந்த நிலையில், கைது செய்யப்படும் மீனவர்களிடம், அவர்களது சக்திக்கு மீறிய அபராதத்தை இலங்கை நீதிமன்றங்கள் விதிக்கின்றன"- என்றும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# "பகுஜன் சமாஜ் தமிழக பொது செயலாளர் 14 நாட்களில் மன்னிப்பு கேட்க வேண்டும்"

சென்னை, செப். 25

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் எனக்கு தொடர்பு இருப்பதாக கூறிய பகுஜன் சமாஜ் கட்சி தமிழக பொதுச் செயலாளர் ஜெய்சங்கர் 14 நாட்களில் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் 10 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடரப்படும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை நோட்டீஸ் அனுப்பியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தலுக்கு ரூ.11 பில்லியன் செலவாகும்!

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்


கொழும்பு, செப். 25

**பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக் குழுவின் ஆணையாளர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-**

இரண்டரை வருடங்கள் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தால் தேர்தலை நடத்துவதற்குரிய நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. அரசாங்க கூட்டிணைவு நிதியத்தில் இருந்து அதற்குரிய நிதியை அவர் வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் குறை நிரப்பு பிரேரணை ஊடாக நிதியை பெற்று வழங்கலாம்.

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைவிடவும் பாராளுமன்றத் தேர்தலை நடத்தவே அதிகம் செலவாகும். 22 தேர்தல் மாவட்டங்களிலும் வேட்புமனுக்களை பெற வேண்டும், நிறைய வளங்களை பயன்படுத்தவேண்டிவரும். எது எப்படி இருந்தாலும் குறைந்தளவு செலவுடன் தேர்தலை நடத்த எதிர்பார்க்கின்றோம் - என்றார்.



# தியாகதீபம் திலீபனுக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, செப். 25

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் உள்ள பொங்குதமிழ் தூபியில் இடம்பெற்றது.

இதன்போது பொது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி கா.ஜெயவனிதாவினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து திலீபனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், பொங்கு தமிழ் தூபியில் சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கையர்களை அவதானமாக இருக்குமாறு இஸ்ரேல் கோரிக்கை

கொழும்பு, செப். 25

இஸ்ரேலிய இலக்குகள் மீது ஹெஸ்புல்லாவின் வான் வழித் தாக்குதல்கள் காரணமாக அங்கு தங்கியுள்ள இலங்கையர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவ்வப்போது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் பாதுகாப்பு சமிக்ஞைகள் ஒலிக்கப்படும் போது, இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்கள் அருகில் உள்ள பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பெண்களுடன் அநாகரிகமாக நடந்தோரை எச்சரித்த பஸ் சாரதிமீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு அருகில் பெண்களுடன் சேட்டை புரிந்த இளைஞர்களை எச்சரித்த தனியார் பஸ் சாரதி மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பஸ் சாரதியான வினாசித்தம்பி ஜெகதீஸ்வரன் என்பவர் மீதே நேற்று முன்தினம் திங்கட்கிழமை வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் பயணிகளை ஏற்றி வந்தவேளை மணியந்தோட்டம் பகுதியில் பஸ்ஸை மறித்து சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த சாரதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் யாழ்.மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் 04 பேர் கொண்ட கும்பல் ஒன்று, பஸ் நிலையத்துக்கு வரும் பெண்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்டு தொந்தரவு செய்துள்ளது.

இதனை அவதனித்த சாரதி, குறித்த இளைஞர்களை கடுமையாக எச்சரித்து அங்கிருந்து அப்புறப்படுத்தி இருந்தார்.

இந்நிலையில், அன்றைய தினம் பெண்களுடன் அநாகரிகமாக நடந்துகொண்ட கும்பலைச் சேர்ந்தவர்கள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்து, பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்ஸை மறித்து வாள் வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய யாழ். உணவகமொன்றுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையம் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 15 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, உரிய முறையில் குளிர்சானப் பெட்டியை பேணத் தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவ சான்றிதழ் கொண்டிராமை, சுகாதார முறைப்படி உணவு கையாளும் இடப்பரப்பினை பேண தவறியமை, உபகரணங்களை உரிய முறையில் பேண தவறியமை போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக உரிமையாளர்கள் மீது மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது 15 உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40,000 ரூபா அபராதம் விதித்தது.

அதேவேளை, ஒரு உரிமையாளரின் உணவகத்தில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# எரிபொருள் விநியோகத்துக்கான வலுவான நிதிக்கட்டமைப்பையே கையளித்துள்ளேன்!

## முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜயசேகர

கொழும்பு, செப். 25

பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்பை கையளித்துச் செல்வதாக முன்னாள் மின் மற்றும் சக்தி வலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பதவி விலகலுடன் அமைச்சரவை கலைந்துள்ள நிலையில் மின் மற்றும் வலு சக்தி அமைச்சின் வாகனங்களையும் பொறுப்புக்களையும் நேற்று முன் தினம் கையளித்த பின்னராக எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில்-

தேவையான அளவு பெற்றோலிய உற்பத்தி மற்றும் மின் உற்பத்திக்கு அவசியமான நிலக்கரி கையிருப்புக்களுடனேயே அமைச்சின் பொறுப்புக்களை கையளித்துள்ளேன். இவ்வனைத்து கட்டமைப்புக்களும் விநியோகஸ்தர்களுக்கான உரிய கால நிதி செலுத்துகை மேலதிக வருமானத்தின் ஊடாக திறைசேரிக்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட நேர்மறையான விளைவுகளை வழங்கும் நிலையில் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட கடந்த இரண்டு வருட காலத்தில் எனக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

2022 ஆம் ஆண்டு 4 தொடக்கம் 13 மணித்தியால மின் விநியோக துண்டிப்பு, எரிபொருள், நிலக்கரி பற்றாக்குறை, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விநியோகஸ்தர்கள் இன்மை, அவற்றுக்கு தேவையான நிதி இன்மை, ஆகிய நெருக்கடி நிலையே காணப்பட்டது.

ஆனால் தற்போது தடைப்படாத எரிபொருள் மற்றும் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறான போதிய நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்புக்களாக இவற்றை கையளித்துச் செல்கிறேன். -என்று கூறியுள்ளார். (அ)

# பொதுத்தேர்தலில் ஊழல்வாதிகளை நிறுத்தினால் நாம் தோற்கடிப்போம்!

## இலங்கை தேசிய கட்டுமான சங்கம்

கொழும்பு, செப். 24

பொதுத்தேர்தலில் ஊழல்வாதிகளை நிறுத்தினால் தோற்கடிப்போம் என இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுசந்த லியனராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

22 மாவட்டங்களிலும் மக்கள் வழங்கியுள்ள ஆணையை எடுத்து நோக்குமாறு பழைய அரசியல் கட்சிகளுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். புதிய மாற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதையே மக்கள் வழங்கியுள்ள ஆணையின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளனர்.

ஆகவே ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினரை மீண்டும் கட்சிகள் பொது தேர்தலில் களமிறக்கிளால் நாம் நிச்சயம் அவர்களை சிவில் அமைப்புக்கள் என்ற வகையில் தோற்கடிப்போம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

ஊழல் மோசடி காரர்களுக்கு இடமளிக்க வேண்டாம் என கட்சியின் தலைவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். -என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு நாட்டை கட்டி எழுப்ப இனப்பிரச்னை தீரவேண்டும்!

## அநுரவிடம் கஜேந்திரன் கோரிக்கை

வவுனியா, செப். 25

**நீங்கள் கனவு காணும் நாட்டை கட்டி எழுப்பவேண்டுமாக இருந்தால் இந்த நாட்டின் இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வ ராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**



வவுனியாவில் நேற்று இடம் பெற்ற திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தொடர்ந்து கருத்து தெரி வித்த அவர்-

அநுரகுமாரவும் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடிய ஒருவராக இருக்கின்றார். அவர் கள் சோசலிசவாதிகளாக தங்க ளைக் காட்டிக்கொண்டிருந்தா லும் துரதிஷ்டவசமாக அவர்க ளது அமைப்பு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பிற்கு கடந்தகாலங்களில் முழுமை யாக துணைநின்றது.

ஒன்றரை இலட்சம் அப் பாவி தமிழ்மக்கள் இறுதிப் போரில் மடிவதற்கு இந்த அமைப்பு உதவி புரிந்தது. தற் போது நாட்டின் ஆட்சி அதி காரத்தினை அவர்கள் பிடித் துள்ளனர். நாங்கள் அனைவரை யும் அரவணைத்துச்செல்வோம் என்று அவர்கள் சொல்வது கேட்பதற்கு இனிமையாக இருக்கலாம். நாம் அவரிடம் கேட்பது என்னவென்றால் ஒரு மாற்றத்திற்காக சிங்கள மக்கள் அதிகாரத்தை உங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

நீங்கள் கனவுகாண்கின்ற நாட்டை கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டினுடைய இனப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும். அது எவ்வாறு தீர்க்கப்படவேண்டும் என்று நீங்கள் முடிவெடுக்க முடியாது. உங்களுக்கு அந்த அருகதை கிடையாது. தமிழர் களின் விருப்பங்களை ஏற்றுக் கொண்டு அந்த விருப்பங்களை அங்கிகரிக்கும் மூலமாக தமிழர்களை இந்தநாட்டின் ஆட்சியிலே பங்காளிகள் ஆக்குவதற்கு துணியவேண்டும்.

அந்த துணிச்சல் உங்களுக்கு இருக்கவேண்டும் என்று புத்த பிரானையும் எமது கடவுளர் களையும் நாங்கள் பிரார்த்திக் கின்றோம். வடக்கு-கிழக்கு தமிழர்தாயகத்தை அங்கீகரித்து எமது தேசம் இறைமை என்ற வகையில் எமது சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்து அதன டிப்படையில் ஒரு சமஷ்டி அரசியலமைப்பினை கொண்டு வருவதனூடாக இந்த நாட்டி னுடைய எதிர்காலத்தை முன் னோக்கி நகர்த்துவதற்கு தமி ழர்களின் பங்களிப்பை பெறுவதற்கான அத்திவாரத்தை நீங்கள் இடவேண்டும்.

அதற்குரிய அணுகுமுறை ளையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நீங்கள் உடனடி யாக இறங்கவேண்டும்என்ற கோரிக்கையினை நாங்கள் அவரை நோக்கி முன்வைக் கின்றோம் - என்றார். (அ)



## பள்ளிவாசலுக்கு சென்ற ஜனாதிபதி மௌலவிமார்களிடம் ஆசி பெற்றார்

### கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்

கொழும்பு, செப். 25

நாட்டின் 9ஆவது நிறை வேற்றதிகார ஜனாதிபதியாக நேற்று முன் தினம் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க, மதத் தலைவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

அந்தவகையில் நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக் குச் சென்ற ஜனாதிபதி, மௌல விமார்களை சந்தித்து ஆசி பெற்றதுடன், கலந்துரையாட லிலும் ஈடுபட்டார். (அ)

# அநுரவுக்கு ஜீவன் வாழ்த்து

கொழும்பு, செப். 25

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக தெரிவு செய் யப்பட்டுள்ள அநுரகுமார திஸா நாயக்கவுக்கு எனது வாழ்த்துக் கள் - என்று இதொகாவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவரது முகநூல் பதிவு வருமாறு-

சவால்களை எதிர்கொண்டு நம் நாட்டை வழிநடத்த உங்க ளுக்கு பலம் மற்றும் தைரியம் கிடைக்க வேண்டுகிறேன்.

எங்களுடைய பொருளாதார மற்றும் சமூக சவால்களை சமா ளிக்க தேவையான சீர்திருத்தங் களை நீங்கள் தொடரும்போது உங்களுடைய மிகவும் போற் றப்படும் நடைமுறைவாதம் தேவைப்படும்.

அனைத்து இலங்கையர்க ளையும், குறிப்பாக எங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வர்களை மேம்படுத்துவதற்கு நீங்கள் செயற்படும்போது உங்களது செயற்பாடுகளை காண ஆவலுடன் காத்திருக் கிறேன்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் மிகவும் கடினமான காலகட்டங்களில் ஒன்றான உங்களது நிலையான தலைமைத்துவம் விலை மதிப் பற்றது. உங்கள் முயற்சிகள் எங்கள் தேசத்தின் மீட்சிக்கான அடித்தளத்தை அமைத்துள் ளன, நீங்கள் வழங்கிய சேவைக்கு நாங்கள் என்றென் றும் கடமைப்பட்டிருக்கோம்.

வரலாற்றில் மிகவும் அமை தியான தேர்தலை நாங்கள் இப் போதுதான் முடித்துள்ளோம் என்பது, சுதந்திரமான அமைப் புகளை உருவாக்குவதற்கும், நமது துடிப்பான ஜனநாய கத்தை வலுப்படுத்துவதற்கும் நீங்கள் ஆற்றிய பணிக்கு சான்றாகும். உங்கள் அமைச்சர வையில் பணியாற்றியதில் மிக வும் பெருமை கொள்கிறேன்.

உங்கள் தைரியம் மற்றும் தலைமைத்துவத்திற்காக வரலாறு நீண்ட காலமாக உங்களைப் போற்றிப் பேசும்.

இலங்கையின் வரலாற்றில் இந்த புதிய அத்தியாயத்தில் நாம் நுழையும்போது, மக்களுக் குச் சேவை செய்வதிலும், வள மான மற்றும் ஐக்கிய இலங் கையை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதி லும் நான் உறுதியாக இருக் கிறேன் - என்றுள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் சந்தேக நபர் சிக்கினார்!

கொழும்பு, செப். 25

பேருவளை - மாகல்கந்த பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார் என பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

49 வயதுடைய மினு வங் கொட பகுதியைச் சேர்ந்த ஒரு வரே இவ்வாறு கைதானதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, சந்தேகநப ரிடம் இருந்து 303.500 மில்லி கிராம் ஹெரொயின் கைப் பற்றப்பட்டதாக தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை பேரு வளை பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (அ)

# முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, செப். 25

முட்டையொன்றின் விலையில் திடீர் மாற்றம் ஏற்பட் டுள்ளதாக இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள் ளது.

முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த் தக சங்கம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி அதிகரிப்பு மற்றும் தேவை குறைவடைந்தமையே காரணம் என சங்கத்தின் செய லாளர் அனுரசிறி மாரசிங்க தெரிவித்தார். ஒரு முட்டையின் விலை 28 ரூபா தொடக்கம் 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்ப டும் எனவும் அவர் கூறினார். (அ)

# இலங்கை மக்கள் தினமும் ரூ. 6.5 பில்லியன் கடனாளிகள்

கொழும்பு, செப். 25

கடந்த 26 மாதங்களில் நாட் டின் ஆட்சியாளர்கள் பெற்ற கடன் தொகையை வைத்துப் பார்க்கும்போது, நாட்டு மக்கள் தினமும் 6.5 பில்லியன் ரூபா கடனாளிகளாக மாறியுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத் தின் பொருளாதார புள்ளிவிவர வியல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள் ளார்.

நாடு கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இதன் காரணமாக புதிய பொருளாதார சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ளப் பட வேண்டியதன் அவசியத் தையும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஒவ்வொரு மாதமும் இந் நாட்டு மக்கள் 196 பில்லியன் ரூபா கடனாளிகளாக்கப்பட் டுள்ளனர். நாம் ஒவ்வொரு நாளும் 6.5 பில்லியன் ரூபா கட னில் உள்ளோம். இவ்வாறான கடன் தொடர்பில் இலங்கை தற்போது கடும் நெருக்கடியில் உள்ளது. அதேவேளை, 2021 ஆம் ஆண்டு நாட்டின் பண வீக்கத்துடன் ஒப்பிடுகையில், பொருட்கள் மற்றும் சேவை களின் விலைகள் சுமார் 106 வீதம் அதிகரித்துள்ளது.எங்கள் உணவு வகைகளில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் சுமார் 138 வீதம் அதிகரித்துள் ளது. அதன்படி, நாங்கள் மிக வும் விலை உயர்ந்த நிலையில் வாழ்கிறோம். இந்தப் பின்ன ணியில் பொருளாதார நிலை குறித்து திருப்தி அடைய முடி யாது. ஆட்சிக்கு வந்த ஜனா திபதி இந்த நிலைமைகளை சரியாகப் புரிந்துகொண்டு ஏதா வது ஒரு வகையில் தொடர் சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்த வேண்டும்.மிகக் குறு கிய காலத்தில் சில சீர்திருத்தங் களைச் செயல்படுத்துவது அவ சியமாக இருக்கலாம். அதன் மூலம் மக்கள் பொருளாதார ரீதியாக உயரத் தேவையான பின்னணியை உருவாக்கும் திறன் பெறவேண்டும் - என் றார். (அ)

# மாற்றத்தை விரும்பும் மக்களுக்கு தங்கள் வருகை நம்பிக்கை ஒளியைத் தந்துள்ளது!

## அநுரவுக்கு சந்திரகுமார் வாழ்த்து

கிளிநொச்சி, செப். 25

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தாங் கள் தெரிவு செய்யப்பட்டிருப்ப தாவது மாற்றத்தை விரும்பும் மக்களுக்கு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது எனத் தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திர குமார் புதிய ஜனாதிபதிக்கு சமத்துவக் கட்சியின் வாழ்த் துக்களையும் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் விடுத் துள்ள செய்திக்குறிப்பில்-

நடந்துமுடிந்த ஜனாதிபதி தேர்தலில், வரலாற்று வெற்றி யொன்றை தம்வசப்படுத்தி, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேர்வாகியிருக்கும் தங்களுக்கு, சமத்துவ கட்சியின் சார்பில் வாழ்த்துக்கள். அரசியல் மாற்றம் ஒன்றை வேண்டி வேறு தசாப்தங்களாக காத்தி ருக்கும் இலங்கையர்களுக்கு, தங்களது வருகை, நம்பிக்கை யின் ஒளியை வீசி சென்றிருக் கிறது. ஈழத்திருநாட்டை, இந்து சமுத்திரத்தின் செழுமைமிகு நாடாக மீளக்கட்டியெழுப் பும் தங்களது முயற்சிகளுக்கு, எமது கட்சியின் ஆதரவும், ஆசிர்வாதமும் எப்போதும் இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறோம் - எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. கூட்டமைப்பில் இணையப்போவதில்லை

## மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, செப். 25

**ஐக்கிய தேசியக் கட்சியினால் அமைக்கப்பட்டுள்ள கூட்டமைப்பில் இணையப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பலமான கட்சியாக எழுந்து நிற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசியல் அதிகாரத்தை அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான



ஆசனங்களை கைப்பற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த குறிப்பிட்டுள்ளார். (அ)

# இந்திய படகை திருத்தும் பணிக்கு இலங்கை கடற்படை ஒத்துழைப்பு

கொழும்பு, செப். 25

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இலங்கை கடற்படை எல்லைக்குள் பிரவேசித்த இந்திய மீன்பிடிப்படகை திருத்தும் பணிகளுக்கு கடற்படையினர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

இந்திய மீன்பிடிப்படகில் ஐந்து இந்திய மீனவர்கள் பயணித்துள்ளனர். இந்நிலையில் தொழிநுட்பக்கோளாறு காரணமாக குறித்த படகு இலங்கை கடற்பரப்பு எல்லைக்குள் நுழைந்துள்ளது. இந்நிலையில் குறித்த படகு பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன், திருத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இயந்திரக்கோளாறு கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதுடன், ஐந்து இந்திய மீனவர்களுடன் இந்தியா கன்னியாக்குமரியிலிருந்து விசாகபட்டினத்தை நோக்கி பயணித்த தருணத்தில் சீரற்ற காலநிலையின் காரணமாக ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறின் காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்ட குறித்த படகு கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன் துறை கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டு சரி செய்யப்பட்டு நேற்று முன்தினம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பாரம்பரிய கட்சிகள் மக்களால் நிராகரிப்பு

## குமார் குணரட்ணம் கூறுகிறார்

கொழும்பு, செப். 25

பழமையான பாரம்பரிய அரசியல் கட்சிகளை மக்கள் நிராகரித்தமை தேர்தல் முடிவுகளின் ஊடாக புலப்படுவதாக முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் குமார் குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதுவரை காலமும் ஆட்சியமைத்த பாரம்பரிய பழமை வாய்ந்த கட்சிகளை மக்கள் நிராகரித்துள்ளனர். 76 வருடங்களில் பாரம்பரிய அரசியல் கட்சிகளே ஆட்சியமைத்துள் ளன.

இந்த விடயத்தை நாம் சிறந்த மாற்றமாகக் கருதுகின்றோம். நாடு வங்குரோத்து அடைந்தமையினால் ஏற்பட்ட மக்கள் எழுச்சியின் பிரதிபலனாகவே இந்த விடயம் அமைந்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தியினருக்கு பாரிய சவால்கள் உள்ளன.

அநுரகுமார திசாநாயக்க அவருடைய தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாக கூறியிருந்தார். அந்த வகையில் ஊழல் மோசாடிகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டியது அவசியமாகும் - என்றார். (அ)

# நிர்வாக கட்டமைப்பில் மாற்றத்துக்கு ஊழலற்ற செயல்திட்டம் மிகஅவசியம்

## சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டணி

கொழும்பு, செப். 25

நிர்வாக கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவேண்டுமாயின் ஊழலற்ற செயற்றிட்டம் அவசியம் என சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் சொத்துக்களை உரியவாறு பயன்படுத்தாமை மற்றும் மோசடிக்குள் உள்ளாக்குவதே நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

ஆகவே அதிலிருந்து விடுபட்டு முறைமை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே மக்கள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர். ஆகவே அந்த மாற்றத்தை ஜனாதிபதியால் ஏற்படுத்த முடியுமாக இருக்க வேண்டும் என பிராத்தித்துக் கொள்கின்றோம்.

பாரம்பரிய அரசியல் கட்சிகள் தம்முடைய சகாக்களுக்கும் தேர்தல்களில் ஆதரவழித்தவர்களுக்கு வரப்பிரசாதங்களை வழங்கி ஆட்சி புரிந்தமையையே நாம் கண்டிருக்கின்றோம். அந்த விடயங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அநுர குமார திஸநாயக்கவை மக்கள் ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

ஆகவே அரசியல் இயந்திரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். அதன் ஊடாக மாத்திரமே நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நிர்வாக இயந்திரத்தில் மாற்றம் வேண்டும் எனின் திறமையானவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

சுகாதார அமைச்சிற்கு புதிய செயலாளரை நியமிப்பதாயினும் இல்லையாயினும் ஊழல் அற்ற சிறந்த வேலைத்திட்டம் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். அதன் ஊடாகவே மாற்றத்தை ஏற்படுத்த முடியும்- என்றார். (அ)

# அநுரவுக்கு சவூதியும் வாழ்த்து

கொழும்பு, செப். 25

இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய தேர்தல் வெற்றிக்கு சவுதி அரேபியாவின் முக்கிய தலைவர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

அதன்படி, இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் மற்றும் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஆகியோர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளதாக சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சு எக்ஸ் கணக்கில் தெரிவித்துள்ளது.

அந்த செய்தியில் சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளதாவது -

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக அரசியலமைப்புப் பிரமாணம் செய்து கொண்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் வாழ்த்து தந்தி அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக அரசியலமைப்புப் பிரமாணம் செய்து கொண்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு, பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் மொஹமட் பின் சல்மானும் வாழ்த்துத் தந்தி அனுப்பியுள்ளார். - என்றுள்ளது. (அ)

# பொதுத் தேர்தலில் போட்டியிட வலுவான வேலைத்திட்டங்கள்

## கூறுகிறார் காவிந்த ஜயவர்த்தன

கொழும்பு, செப். 25

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வலுவான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலை வெற்றி கொள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எதிர்வரும் தேர்தலிலும் கூட்டணியாகப் போட்டியிடவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு முழுமையான வாக்குகள் கிடைக்கப் பெறவில்லை. 30 இலட்சம் பேர்வரை வாக்களிக்கவில்லை.

எதிர்வரும் தேர்தலில் ஒற்றுமையாகப் பயணிக்கவுள்ளோம்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாசவே தொடர்ந்தும் செயற்படுவார் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறினார். (அ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, செப். 25

பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் நேற்று மதியம் தடம் புரண்டதால் மலையக ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக பதுளை ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கிடையிலான பகுதியிலேயே குறித்த ரயில் தடம் புரண்டுள்ளது.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக ரயில் தண்டவாளம் பாரியளவில் சேதமடைந்துள்ளதாகவும், சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து சர்வதேச ரீதியில் பந்தயம்!

கொழும்பு, செப். 25

நடந்து முடிந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வதேச ரீதியில் பந்தயத்தில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில், உலகளாவிய கிரிப்டோ இணையத்தளம் ஒன்றினூடாக 48 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகை பந்தயம் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இணையதளம் மூலம் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் நடைபெறும் தேர்தல்கள் முதற் கொண்டு விளையாட்டுப் போட்டிகள் வரை பந்தயத்தில் ஈடுபடுவதற்கு பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகிறது.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் இந்த இணையதளம் மூலம் கிரிப்டோகரன்ஸியினை பயன்படுத்தி பந்தயத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான அரச ஊழியர்களுக்கு நீதி வேண்டும்

## ஜனாதிபதியிடம் தொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை

கல்முனை, செப். 25

**கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நீதி வழங்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்து குறித்த சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

"ஜனாதிபதித் தேர்தலில் ஏகோபித்த மக்கள் அபிமானங்களை வென்று, பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.


எமது நாடு பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை சந்தித்த நிலையில் பல சவால்களுக்கு மத்தியில் அரச ஊழியர்களும், பொதுமக்களும் தங்களுக்கு வழங்கிய ஆணை மூலம் ஜனாதிபதியாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். உங்கள் மீது சகல இன மக்களும் பெரும் எதிர்பார்ப்பு கொண்டுள்ளனர்.

இந்த எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் வெற்றிகொள்ள உங்களின் பயணம் வெற்றிகரமாக அமையவேண்டும். அதற்கு எல்லோருக்கும் பொதுவான இறைவனின் ஆசியும், அருளும் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக, அரச ஊழியர்கள் கடந்த காலங்களில் எதிர் நோக்கி வந்த பொருளாதார ரீதியான சிக்கல்கள் உள்ளிட்ட அரசியல் பழிவாங்கல்கள், பதவியுயர்வு, அவர்களுக்கு முறையாக கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் போன்ற பல் வேறுபட்ட பிரச்னைகளையும் தாங்கள் அறிவீர்கள்.

இதற்கமைவாக, அவர்களுக்கு சிறந்தொரு தீர்வையும் பெற்றுக்கொடுப்பதுடன் தங்கள் மீது முழுமையான நம்பிக்கை வைத்து வாக்களித்த அரச ஊழியர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்" என குறித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ. ஆர். எம். நிம்ஸான் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(எ)

# கொக்கட்டிச்சோலையில் பாரம்பரிய ஏர்பூட்டும் விழா



மட்டக்களப்பு, செப். 25

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை சிறீ தான் தோன்றீஸ்வரர் ஆலய ஏர்பூட்டு விழா நேற்று செவ்வாய்க்கிழமை விழாக்குழுத் தலைவர் க. சிவ குருநாதன் தலைமையில் பாரம் பரிய சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவசிறீ மு. கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவசிறீ வ. ஜோதி லிங்க குருக்கள் ஆசியோடு இந்த நிகழ்வு ஆலய காணியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், பட்டிப்பளை பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கலாபூஷணம் ஞான பேரின்பம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான இ. மேகராசா( தலைவர்), சி. கங்காதரன்( செயலாளர் ),ச. கோகுல கிருஷ்ணன் ( பொருளாளர்) ஆகியோர் ஏர்பூட்டு விழாவை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ. அகிலேஸ்வரன், விவசாய சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ)

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தத் திருவிழா





கொக்கட்டிச்சோலை,செப். 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை சிறீ தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்த திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள "சாமிரவில்லு" என அழைக்கப்படும் தீர்த்தக் குளத்தில் காலை 8 மணியளவில் சிவன் உறை சிவகாமி விசேட பந்தலில் அபிஷேகம் செய்யப்பட்டு தீர்த்தமாடினர்.

அதை தொடர்ந்து பெருந்திரளான பக்தர்களும் தீர்த்தமாடினர்.(எ)

# மு. கா. கட்சி செயல்பாடுகளில் இளையோருக்கு முன்னுரிமை

மாளிகைக்காடு, செப். 25

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் செயல்பாடுகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த இறக்காமம், மாளிகைக்காடு, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் குழுக்களுடன் விசேட சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கட்சியின் உச்ச பீடத்தின் தீர்மானத்துக்கமைவாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு கடின உழைப்புடன் செயல்பட்ட தேர்தல் குழுக்களுக்கும், இறக்காமம், மாளிகைக்காடு, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த மக்களுக்கும் கட்சியின் தலைவர் சார்பிலும், கட்சி சார்பிலும் இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் பல சவால்களை எதிர் கொள்வதற்கான திராணியை வளர்த்துக்கொள்வதுடன் எமது கட்சி செயல்பாடுகளில் புதிய இளைய தலைமுறையினருக்கு முன்னுரிமை வழங்கி கட்சி செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான எம். எஸ். உதுமாலெப்பை, கட்சியின் உச்ச பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயல்குழுவின் செயலாளருமான ஏ. சி. சமால்தீன், கட்சியின் உச்ச பீட உறுப்பினரும், இறக்காம பிரதேச ஜனாதிபதி தேர்தல் குழுவின் தலைவருமான யூ. எல். ரியாஸ், இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம். எல். முஸ்னி, கிளை தலைவர்கள் மற்றும் கட்சி முக்கியத்தர்களும், மாளிகைக்காடு பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம். எச். எம். இஸ்மாயில், நற்பிட்டிமுனை முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் யூ. எல். தௌபிக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

# ஜனாதிபதி அநுரவின் ஆட்சியின் கீழ் வளமான நாடு உருவாக வேண்டும்

## பெரிய பள்ளிவாசலில் பிரார்த்தனை



சாய்ந்தமருது, செப். 25

9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சியின் கீழ், இலங்கையில் இன ஐக்கியம், சுபீட்சம் ஏற்பட்டு, வளமான நாடு உருவாகும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட துஆப் பிரார்த்தனை திங்கட்கிழமை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ. எல். எம். மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம். ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின்

கல்முனை தேர்தல் தொகுதி இணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயல்குழு உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா உட்பட சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் துஆப் பிரார்த்தனையில் பங்கேற்றனர். (எ)

# புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புக்கான போட்டி கண்காட்சி சம்மாந்துறையில்

சம்மாந்துறை, செப். 25

தேசிய புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான சம்மாந்துறை வலய மட்ட போட்டி புத்தாக்க கண்காட்சி சம் மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கண்காட்சியை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத், திருமதி நிலோபரா, பி. பரமதயாளன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா உள்ளிட்ட கல்வி சார் விருந்தினர்கள் பார்வை யிட்டனர்.

சம்மாந்துறை வலய மட்டத்தில் நடத்தப் பட்ட வலய மட்ட புத்தாக்க போட்டியில் பத்து புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்ட புத்தாக்க போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் [illegible] தெரிவித்தார். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலில் 35 குழந்தைகள் உட்பட 500 பேர் பலி!

## லெபனான் மக்களுக்கு இறுதி எச்சரிக்கை

பெய்ரூட், செப். 25

**லெபனான்மீது இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 500 பேர் உயிரிழந்தனர். இதில் 35 குழந்தைகளும் 200 இற்கும் மேற்பட்ட பெண்களும் அடங்குவர். மேலும், 1,200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**



போர் பதற்றம் மென்மேலும் அதிகரித்துள்ளதால், தெற்கு லெபனானில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

தெற்கு துறைமுக நகரமான சிடோனில் உள்ள பிரதான நெடுஞ்சாலையில் பெய்ரூட் நோக்கி செல்லும் பகுதியில் கார்கள் நிரம்பியுள்ளன. அத்தோடு, அந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மாற்று இடங்களாக மாற்றப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடையே லெபனான் பொது மக்கள் பயன்படுத்தும் தொலைபேசிகளுக்கு இஸ்ரேல் குறுஞ் செய்திகளை அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வரைபடத்தை பகிர்ந்துள்ளதாகவும், அங்கு ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதங்கள் இருப்பதாகவும், எனவே, அங்கெல்லாம் குண்டு வீசப்போகிறோம் என்றும் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தச் சூழலில் இஸ்ரேல் இராணுவம் மற்றும் லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது.

முன்னதாக கடந்த 17ஆம் திகதி ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பயன்படுத்திய 5 ஆயிரம் பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் பலர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது மிகப் பெரிய அளவில் தாக்குதல் நடத்துவோம் என்று ஹிஸ்புல்லா அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்து. இதனைத் தொடர்ந்து, சில தினங்களுக்கு முன்பு லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினரைக் குறி வைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 1,300 இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், லெபனானில் புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 35 குழந்தைகள் உட்பட 500 பேர் உயிரிழந்தனர். 1,200 பேர் காயமடைந்ததாகவும் லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே பெய்ரூட் தாக்குதலுக்குப் பிறகு உயர் தளபதி உயிருடன் இருப்பதாகவும், அவர் தற்போது பாதுகாப்பான இடத்தில் உள்ளதாகவும் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனானில் கிராமங்கள், நகரப் பகுதிகள் உட்பட பல இடங்களை ஹிஸ்புல்லா ஆயுதக் கிடங்குகளாக பயன்படுத்தி வருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப் படுத்தியுள்ள நிலையில், லெபனானில் உள்ள மக்கள் உடனடியாக தங்கள் வீடுகள் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களைச் சேமித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் கட்டடங்களை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துள்ளது.(எ)



# செவ்வாய் கிரகத்துக்கு ஆளில்லா விண்கலம்

எலான் மஸ்க்

நியூயோர்க், செப். 25

அடுத்த இரண்டு ஆண்டுகளில் செவ்வாய் கிரகத்துக்கு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஐந்து விண்கலங்களை அனுப்பும் திட்டம் உள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

"மனிதர்களை செவ்வாய்க்கு அனுப்பும் நோக்கில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஐந்து ஆளில்லா ஸ்டார்ஷிப்களை அனுப்பும் திட்டம் உள்ளது. இந்த மிஷனில் ஸ்டார்ஷிப் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கினால் நான்கு ஆண்டுகளில் மனிதர்கள் அங்கு செல்வார்கள். அப்படி இல்லாத பட்சத்தில் அங்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகள் தாமதமாகும்" என கூறினார். (எ)

# 200 ரொக்கெட்களை ஏவி இஸ்ரேல்மீது தாக்குதல்!

## ஹிஸ்புல்லா போராளிகள் பதிலடி

ஜெருசலேம், செப். 25



இஸ்ரேல் மீது ஹிஸ் புல்லா போராளிகள் 200 ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் போராளிக ளுக்கு ஆதரவாக ஏம னில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ் புல்லா போராளிகளும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் மீது ஹிஸ் புல்லா போராளிகள் 200 ரொக்கெட்களை ஏவி தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலின் ரமத் டேவிட் விமானப் படைத்தளம், நாசரேத் நகரம், மஹிடோ விமானப் படைத் தளம், ஹைபா, அப்லா போன்ற நகரங்களை குறி வைத்து ஹிஸ்புல்லா 200 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்களை ஏவி தாக்குதல் நடத்தியது. ஆனால், இந்த ரொக் கெட்களை இஸ்ரேலின் வான்பாதுகாப்பு அமைப்பு நடுவானில் தடுத்து நிறுத்தி அழித் தது. இந்த தாக்குதலில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (எ)

# காஸாவில் அமைதி திரும்ப இந்தியா ஆதரவு வழங்கும்

## பலஸ்தீன ஜனாதிபதியிடம் இந்திய பிரதமர் உறுதி

நியூயோர்க், செப். 25

நியூயோர்க்கில் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். இதன்போது, காஸாவில் அமைதி திரும்ப இந்தியா முழு ஆதரவு வழங்கும் என்று மோடி உறுதிபட தெரிவித்தார்.

ஐ. நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு சென்றார். அங்கு பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்தார். இஸ்ரேல் இராணுவம் - ஹமாஸ் தீவிரவாதிகள் இடையே நடைபெறும் போரால் காஸா மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது குறித்து மோடி ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறியவை வருமாறு,

"காஸாவில் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும். அங்கு அமைதி திரும்ப வேண்டும். ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள இஸ்ரேல் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அனைத்து பிரச்னைகளுக்கும் அமைதி பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்னைக்கு இரு நாடுகள் கொள்கையே நிரந்தர தீர்வாக அமையும். ஐ.நா. சபையில் பலஸ்தீனம் உறுப்பினராக இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கும். கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றில் பலஸ்தீனத்துக்கு தேவையான உதவிகளை இந்தியா வழங்கும்"- இவ்வாறு மோடி கூறினார். (எ)

# "மனித குலத்தின் வெற்றி போர்க்களத்தில் அல்ல"

நியூயோர்க், செப். 25

மனித குலத்தின் வெற்றி போர்க்களத்தில் அல்ல, நமது கூட்டு பலத்தில் உள்ளது- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 79 ஆவது பொதுச் சபை கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"மனித குலத்தின் ஆறில் ஒரு பங்கினரின் குரலை இங்கு பதிவு செய்ய நான் வந்துள்ளேன். இந்தியாவில் 25 கோடி மக்களை வறுமையின் பிடியில் இருந்து மீட்டுள்ளோம். நிலையான வளர்ச்சியை வெற்றிகரமாக்க முடியும் என்பதை இந்தியா நிரூபித்துக் காட்டியுள்ளது. எங்களின் அனுபவத்தை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறோம்.

மனித குலத்தின் வெற்றி நமது கூட்டு பலத்தில் உள்ளது. போர்க்களத்தில் அல்ல. உலகின் அமைதி, வளர்ச்சிக்கு உலகளாவிய அமைப்புகளில் சீர்திருத்தங்கள் அவசியம். ஒருபுறம், பயங்கரவாதம் உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. மறுபுறம், சைபர், கடல் மற்றும் விண்வெளி ஆகியவை மோதலின் புதிய வடிவமாக உருவாகி வருகின்றன. இந்த எல்லாப் பிரச்னைகளிலும், உலகளாவிய நடவடிக்கை உலகளாவிய இலட்சியத்துடன் பொருந்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்துவேன்"- என்றார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியாகவே போட்டி!

## ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானம்

கொழும்பு, செப். 25

**பாராளுமன்றத் தேர்தலை கூட்டணியாகவே எதிர்கொள்வதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் விசேட கூட்டமொன்று எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்காளிக் கட்சி தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பாராளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொண்டு ஆட்சியை பிடிப்பதற்காக கூட்டணியாக களமிறங்கவேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சஜித் பிரேமதாஸவே தலைமைப் பதவியில் தொடரவேண்டும் எனவும், அதில் மாற்றம் வராது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என சிலர் யோசனை முன்வைத்திருந்தாலும் பெரும்பாலானவர்கள் அதற்கு உடன்படவில்லை என தெரியவருகின்றது. (அ)

# தேர்தல் இலங்கை ஜனநாயகத்தின் வீரியத்தைப் பறை சாற்றியுள்ளது!

## பிரான்ஸ் ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி அனுரவுடன் இணைந்து செயல்படுவதற்கு தயார் என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று, நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், தனது முகநூலில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த பதிவில்,

“உங்கள் ஜனாதிபதி தேர்தல் சிறப்பாக நடைபெற்றதற்கு வாழ்த்துக்கள். இந்த தேர்தல், இலங்கையின் ஜனநாயகத்தின் வீரியத்தை பறைசாற்றுகின்றது. அனுரகுமார திஸாநாயக்க, உங்கள் வெற்றிக்கு எம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!

இலங்கையுடன் இணைந்து செயல்படுவதற்கு பிரான்ஸ் தயாராக உள்ளது. நம்பிக்கையும், ஒத்துழைப்பும் நம் கூட்டு முயற்சிகளுக்கு அடிக்கல்லாக அமையட்டும்” எனவும் தெரிவித்தார். (அ)

# ஹரிணி அமரசூரியவை சந்தித்தார் சந்தோஷ் ஜா!



கொழும்பு, செப். 25

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு இந்திய தூதுவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தரப்பினர் பெற்றுக்கொண்ட வெற்றிக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை மற்றும் இந்திய இரு தரப்பு முன்னெடுப்புகள் தொடர்பாகவும் இலங்கைக்கான இந்திய தூதுவர் தெளிவுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வினாத்தாள் கசிவு விவகாரம்

# மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை!

கொழும்பு, செப். 25

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பில் மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசிந்தமை தொடர்பான சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப்பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கியதாகக் கூறப்படும் நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# விஜித ஹேரத்தை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு!




கொழும்பு, செப். 25

தேசிய மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தை எதிர்வரும் நவம்பர் 29 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் சந்திரவன்ச பத்திராஜாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் சாட்சியம் அளிப்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபையின் விளம்பர நடவடிக்கைகளில் தனியார் நிறுவனமொன்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் அரசாங்கத்துக்கு 64 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகக் கூறி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சந்திரவன்ச பத்திராஜாவுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது. (அ)



# கொழும்பு பேராயரை சந்தித்தார் அநுரகுமார!

கொழும்பு, செப். 25

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி பொறுப்புக்களை நேற்று முன்தினம் கையேற்ற பின்னர், கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார். பொரளை பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, பேராயரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன் உரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தினால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை,

நாட்டுக்கு தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பை நாட்டு மக்கள் உங்களிடம் ஒப்படைத்துள்ளனர். இது பொறுப்பு வாய்ந்த மற்றும் கடினமான பணியாக இருக்கலாம். அதற்காக அவருக்கு நாம் முழு ஆதரவையும் ஆசிகளையும் வழங்குவோம் என உறுதியளித்தார்.

இந்நாட்டின் வறிய மக்களைப் பற்றி சிந்தித்து உங்கள் பணியை தொடருமாறும் கேட்டுக்கொண்டார்.

கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர்களான மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, ஜே.டி.அந்தோனி ஆண்டகை, அன்டன் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு பேராயர்களின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி, கொழும்பு பேராயரின் செயலாளர் அருட்தந்தை ஜோசப் இந்திக்க, பொருளாளர் அருட்தந்தை ஜூட் சமந்த பெர்னாண்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அர்சகுல ரத்ன உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# கென்யா ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து!

கொழும்பு, செப். 25

நாட்டின் புதிய ஜனாதிபதிக்கு கென்யா ஜனாதிபதி வில்லியம் ருட்டோவும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வில்லியம் ருட்டோ, தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த இராஜதந்திர உறவுகளை வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி திஸாநாயக்கவின் தெரிவு, அவரது தலைமையின் மீது இலங்கை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வலுவான உறுதிப்படுத்தல் என அவர் சுட்டிக்காட்டினார்.

கென்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால மற்றும் சுமூகமான உறவுகள், இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததில் இருந்து பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டு வருவதாக கென்ய ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வர்த்தகம், முதலீடு, கால நிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி, இந்த பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளார். (அ)

# காணாமல்போன நபர் கிணற்றில் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 25

மொனராகலை, புத்தல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகொலவெள பிரதேசத்தில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து நேற்றுமுன்தினம் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தல உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த சில நாட்களாகக் காணாமல் போயிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் வெள்ளவாய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தள பொலிஷஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

நேற்று நடைபெற்றது. இதன் பின் னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இலக்கத்தை மட்டும் பார்த்தால் இப்படி ஒரு விடயத்தை சொல்லலாம். ஆனால், ஆழமான அரசியல் அலசலுக்கு சென்றால் அது உண்மையல்ல என்பது புரியும். நாங்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியாக முன்னோக்கி செல்வோம். அதனுடன் மக்கள் ஏற்றுக் கொள்வோர் கைகோக்கலாம்.

“ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக என்னை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்துள்ளனர். எனது தலைமையில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து செல்லவும் பரிந்துரைத்தனர்”, என்றும் கூறினார். (ஐ)

## 15அமைச்சு...

இவர் முன்னர் யாழ். மாவட்டத்தின் அரச அதிபராக பணியாற்றியிருந்தார். 202ஆம் ஆண்டு இதே அமைச்சு துறைகளின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் உரையை நேரலையாக ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரதமரானார்...

பெருமையை ஹரிணி அமரசூரிய பெற்றுள்ளார். முன்னதாக சிறீமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் பிரதமர்களாக பதவி வகித்துள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவு செய்யப்பட்டார்.

1970 மார்ச் 6 ஆம் திகதி பிறந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, அரசியலுக்கு வருவதற்கு முன்னர் விரிவுரையாளராக பணியாற்றியிருந்தார்.

பிரிட்டனின் எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் முனைவர் பட்டம் பெற்ற அவர், 2011ஆம் ஆண்டு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இணைந்த பின்னர், இலவச கல்விக்கான போராட்டங்களில் கலந்து கொண்ட சமூக ஆர்வலரும் ஆவார்.

பல வருடங்கள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் மருத்துவராக பணியாற்றிய பின்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

ஹரிணி அமரசூரிய 2019 ஆம் ஆண்டு தேசிய புத்திஜீவிகள் அமைப்பில் இணைந்தார். அதே வருடம் ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார்.

12 ஒகஸ்ட் 2020 அன்று, இலங்கை பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் முதன்முறையாக நாட்டின் 16ஆவது பாராளுமன்றத்தில் நுழைவதற்காக தேசியப் பட்டியல் வேட்பாளராக தேசிய மக்கள் சக்தியால் அவர் பரிந்துரைக்கப்பட்டார்.

தேசியப் பட்டியல் வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்விசார் சிரேஷ்ட விரிவுரையாளராக ஹரிணி தனது பணியைத் தொடர முடியுமா என்ற சிக்கல் நிலையும் எழுந்தது. இதையடுத்து, விரிவுரையாளர் பதவியிலிருந்து அவர் விலகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## செப்.30...

அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

இந்த முறை சாதாரண தர பரீட்சைக்கு 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 331 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றினர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## அநுரவுடன்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் கடன் உதவியை வழங்கி வருகின்றது.

இந்தநிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு புதிய அரசாங்கத்துடன் பணியாற்றத் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில், விரைவில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## நிறைவேற்..

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான சிறந்த தருணம் இது.

அவர்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க விரும் பினால் அதனை தாமதிக்கக்கூடாது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பாராளுமன்றம்...

தேர்தல் திகதியாக நிர்ணயிக்குமா றும் ஒக்ரோபர் 4 முதல் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனு தாக்கல் காலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஊழல்...

கலந்துரையாடலை நேற்று செவ்வாய்க்கிழமை நெலும் மாவத்தை யில் உள்ள தலைமையகத் தில் நடத்தி யது.

இந்தக் கூட்டத்தில்இ ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியில் இருந்து விலகியவர்களை மீண்டும் கட்சியில் மீண்டும் இணைப்பது என்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் மீண்டும் சேர்ப்பதில்லை எனவும் அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது. (ஐ)

## புவிசார்...

சர்வதேச சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

புவிசார் அரசியல் மோதல்களில் இருந்து விலகியிருப்பதற்கான தனது அரசாங்கத்தின் விருப்பத்தை அநுர குமார வெளியிட்டுள்ளார். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் இரண்டு நெருங்கிய அயல் நாடுகளான சீனா, இந்தியாவுடன் சமநிலையான உறவுகளை பேண முயலும் என குறிப்பிட்டுள்ள அவர், குறிப்பிட்ட ஒரு நாட்டு டன் தன்னை இணைத்துக்கொள்ள முயலாது என கூறியுள்ளார்.

புவிசார் அரசியல் மோதலில் நாங்கள் ஒரு பகுதியாக மாறமாட்டோம். எந்த தரப்புடனும் இணைந்து கொள்ளமாட்டோம் என தெரிவித்துள்ள புதிய ஜனாதிபதி, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் துண்டாடப்படுவதற்கு நாங்கள் விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளும் பெறுமதி மிக்க நணபர்கள்,எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாங்கள் அவர்கள் நெருங்கிய சகாக்களாக மாறுவதை விரும்புகின்றோம் என அனுரகுமார தெரிவித்துள்ளார். ஐரோப்பிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்காவுடனும் சிறந்த உறவை பேண விரும்புகின்றோம் என அவர் கூறினார். (அ)

# பாலியல் ரீதியாக மாணவனை துன்புறுத்திய ஆசிரியை கைது

வவுனியா, செப். 25

வவுனியாவில் 14 வயது மாணவன் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பயிலுநர் ஆசிரியை ஒருவரை நேற்று கைது செய்யப்பட்டார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் பணியாற்றிய கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஆசிரியையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியையின் பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் பாடசாலையில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிடைக்காத நிலையில் மாணவனின் பெற்றோரால் சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் என்பவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து குறித்த மாணவனின் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், மாணவன் மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாணவன் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேரர் உட்பட 9 பேர் கைது!

கொழும்பு, செப். 25

வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்துரவ பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் தேரர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வெயாங்கொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான தேரர் வெயாங்கொடை பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் ஆனமடுவ, சூரியவெவ, எம்பிலிப்பிட்டிய, மினுவாங்கொடை மற்றும் வெயாங்கொடை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெயாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)


# ரின் மீன் தொழிற்சாலைக்கு சீல்!

கொழும்பு, செப். 25

தரச் சான்றிதழின்றி குருநாகல் பகுதியில் இயங்கி வந்த ரின் மீன் தொழிற்சாலை ஒன்று நுகர்வோர் அதிகார சபையால் முத்திரையிடப்பட்டு பூட்டப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தொழிற்சாலையின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுதவிர குறித்த தொழிற்சாலையிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள ரின் மீன்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## புதிய அமைச்சரவை...



மற்றும் சுற்றுலா, வலுசக்தி, விவ சாயம் - காணி - கால்நடை - நீர்ப்பா சனம் - மீன்பிடி மற்றும் நீரியல் வளங் கள் ஆகிய நான்கு அமைச்சுகள் ஜனா திபதி அநுரகுமார திஸநாயக்கவின் கீழுள்ளன.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கீழ், நீதி - பொது நிர்வாகம் - உள்நாட்டலுவல்கள் - மாகாண சபைகள் - உள்ளூராட்சி மற்றும் தொழில், கல்வி - விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம், பெண்கள் - சிறுவர்கள் மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, வர்த்தகம், வாணிபம் - உணவுப் பாதுகாப்பு - கூட்டுறவு அபிவிருத்தி - கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி, சுகாதார அமைச்சுகள் உள்ளன.

அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ், புத்தசாசனம் - மத மற்றும் கலாச்சார அலுவல்கள் - தேசிய ஒருமைப்பாடு - சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை, போக்குவரத்து - நெடுஞ்சாலைகள் - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, பொதுமக்கள் பாதுகாப்பு, வெளிவிவகாரம், சுற்றாடல் - வனஜீவராசிகள் - வன வளங்கள் - நீர் வழங்கல் - பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை போன்ற துறைகள் வருகின்றன. (ஐ)

## வடக்கு...

ஆளுநர்களை ஜனாதிபதி அநுர குமார விரைவில் நியமிக்கவுள்ளார்.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாண ஆளுநராக நா. வேதநாயகன் நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்றத் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார்

## வஜிர அபேவர்த்தன அறிவிப்பு

கொழும்பு, செப். 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் நிலையான தன்மையை பேணி ஜனநாயகமான முறையில் தேர்தலை நடத்தக்கூடிய அனைத்து ஏற்பாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக நாட்டு மக்கள் அவருக்கு நன்றியை தெரிவிக்கவேண்டும்.

ஆனால் பலர் நன்றி மறந்து செயற்படுவதையே காண முடிவுமாக உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசியலில் தொடர்வார் எனக் கூறியுள்ளார். அதேபோன்று அவர் நாட்டு மக்களுக்கு நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான தீர்வை வழங்க தயாராகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இருப்பினும் இம்முறை பொதுத்தேர்தலில் அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற வகையில் போட்டியிடப்போவதில்லை.

மாற்றமடையும் அரசியல் நிலைப்பாட்டுக்கு அமைய செயற்படுமாறே அவர் கூறியுள்ளார்.

பொதுத்தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பது ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களின் விருப்பாகவுள்ளது.

ஆனால் அது குறித்த இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் பொதுத்தேர்தலில் எதிரணியினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு பயணிப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் அவர்களை ஒன்றிணைக்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (அ)

# எமது குறைகளை திருத்தி மீண்டும் போட்டியிடுவோம்!

## நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, செப். 25

ஜனாதிபதித் தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்கள். எம்மில் காணப்படும் குறைகளை திருத்திக் கொண்டு எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவோம்.

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கட்சித் தாவலில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் சிறந்த பாடத்தை கற்பித்துள்ளார்கள் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய சவால்களுக்கு மத்தியில் தான் தேர்தலில் போட்டியிட்டேன். எம்முடன் இருந்தவர்கள் எம்மை விட்டுச் சென்றார்கள். சவால்களை கண்டு நான் அஞ்சவில்லை.

என்னை பொறுத்தவரை ஏற்றுக் கொண்ட சவாலில் நான் வெற்றி பெற்றுள்ளேன். படுதோல்வி என்று குறிப்பிட முடியாது. வெற்றியோ, அல்லது தோல் வியோ அதனை ஏற்றுக் கொள்வேன் .

ஏனெனில் ஏதும் நிலையானதல்ல, தேர்தல் மேடைகளில் பொய்யுரைக்கவில்லை. எவருக்கும் பாதிப்பற்ற கொள்கைத் திட்டங்களை முன்னிலைப்படுத்தினேன். நாட்டை பிளவுப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்கவில்லை.இந்த தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எம்மிடமுள்ள குறைகளை திருத்திக் கொண்டு எதிர்வரும் காலங்களிலும் போட்டியிடுவேன். ஒரு போதும் தளர்வடையமாட்டேன். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கட்சித் தாவல்களில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பித்துள்ளார்கள்.

தேசியத்தையும், தேசிய உற்பத்திகளையும் முன்னிலைப்படுத்தி செயற்படுவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சிறந்த தீர்மானங்களை எடுப்பாராயின் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்குவோம் - என்றார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு!

## ஊழலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் செல்லாதவாறு

கொழும்பு, செப். 25

**இலங்கையில் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லாதவாறு கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.**

அதற்கமைய சில அரசியல்வாதிகள் விமான நிலையத்துக்கு சென்றபோதும், குடிவரவு அதிகாரிகளால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவுக்கு அமைய சுமார் 30 பேருடைய பெயர் விவரங்கள் விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஏற்கனவே கடந்த ஆட்சியின் போது நாட்டில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்தவர்களின் மனைவிகள், பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்த நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுஜன பெரமுனவிலிருந்து வாக்குகள் கிடைக்கவில்லை!

## எதிர்ப்பார்ப்பு நொருங்கிவிட்டது என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப். 25

பொதுஜன பெரமுன கட்சியில் எதிர்ப்பார்த்த தரப்பினரிடமிருந்து தனக்கு வாக்குகள் கிடைக்கப்பெறவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சி உறுப்பினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுடன் கொழும்பு அரசியல் காரியாலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தார்.



பொதுஜன பெரமுன கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு தெரிவித்தாலும் கூட அவர்களுடன் மக்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை என்பது விளங்குவதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, மொட்டுக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் அநுரகுமார திஸாநாயக்கவுக்காக தமது வாக்குகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அடுத்ததாக பாராளுமன்றத் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அதன்போது, பாராளுமன்றத் தேர்தலுக்கு யானைச் சின்னத்தில் முன்னிலையாவது சிறந்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரிகள் உட்பட கட்சி உறுப்பினர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பாராளுமன்றத் தேர்தலுக்காக அனைத்து மாவட்டங்களில் இருந்தும் நான்கு புதிய முகங்களையாவது முன்நிறுத்த வேண்டியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழ் அரசு மத்திய குழு கூட்டம் அடுத்த வாரம்!

யாழ்ப்பாணம், செப். 25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அடுத்த வாரம் நடைபெறும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அடுத்த கட்டமாக முன்னெடுக்கக்கூடிய நகர்வுகள் தொடர்பாக இதன்போது ஆராயப்படவுள்ளது.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு முரணாகச் செயற்பட்ட கட்சி உறுப்பினர்கள் தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்படும் எனக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடமும் இவ்வார இறுதியில் கூடும் என்று அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்திருந்தார். இந்தக் கூட்டத்தில் முக்கியமான அரசியல் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தலுக்குப் பின் இதுவரை எந்த முறைப்பாடும் இல்லை

கொழும்பு, செப். 25

தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இதுவரை எந்தவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான முறைப்பாடுகள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றில் இதுவரை இடம்பெற்ற தேர்தல்களில் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. தேர்தல் இடம்பெற்ற பின்னர் பல்வேறு சட்ட மீறல்கள், வன்முறைகள் தொடர்பில் கடந்த காலங்களில் முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றபோதும் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இதுவரை எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை.

அதனால் தேர்தலுக்கு பின்னரான இந்த காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாக செயற்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் பயமுறுத்தல், அச்சுறுத்தல்கள் என எமது பவ்ரல் நிறுவனத்துக்கு 1800 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளில் அரச அதிகாரம், அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெற்ற சம்பவங்களும் அதிகளவில் பதிவாகியுள்ளன.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழு, தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து தேர்தல் தினத்தன்று வரை முக்கிய பங்காற்றியுள்ளது. பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடம் காணப்பட்டாலும், தேர்தல் செயன்முறை முழுவதும் சட்டம் ஒழுங்கை வினைத்திறனாகப் பேணுவதற்கும், பக்கச்சார்பற்ற வகையில் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் ஏற்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புடன் செயலாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.